# உவமைகள்



பாடம் 4 ஜூலை 27, 2024








“பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள். எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்; கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும். உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனெவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்றார்.”

(மாற்கு 4:24, 25)

உவமை என்பது ஒரு கற்பனை நிகழ்வின்(உண்மையான நிகழ்வுகளின் அடிப்படையில் இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம்) ஒரு முக்கியமான உண்மை அல்லது தார்மீக போதனை ஒப்பீடு அல்லது ஒப்புமை மூலம் பெறப்படுகிறது.

இந்த ஒரு அமைப்பை தான் இயேசு தன்னுடைய பெரும்பாலான போதனைகளில் பயன்படுத்தினார் (மாற்கு 4:34). அவரது உவமைகள் பொதுவாக அன்றாட வாழ்விலிருந்து எடுக்கப்பட்டவையே, எனவே, நினைவில் வைத்து பயன்படுத்துவது எளிதானது.

அவருடைய பேச்சைக் கேட்டவர்கள் வீடு திரும்பியதும், தாங்கள் கற்றுக்கொண்டதை தங்கள் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் பகிர்ந்து கொண்டனர்.






- உவமைகள் இருப்பதற்கான காரணம். மாற்கு 4:10-12.
- விதைக்கிறவனுடைய உவமை:
  - விதைக்கிறவன் விதைக்க புறப்பட்டான்... மாற்கு 4:1-9.
  - உவமைக்கான விளக்கம். மாற்கு 4:13-20.
- மற்ற உவமைகள்:
  - விளக்கு மற்றும் அளவீடு. மாற்கு 4:21-25.
  - வளர்ச்சி மற்றும் கடுகு விதை. மாற்கு 4:26-32.

# உவமைகள் இருப்பதற்கான காரணம்

"அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது என்றார்." (மாற்கு 4:12)



இயேசுவின் பிரசங்கம் பரலோகராஜ்யத்தை சுற்றியே இருந்தது (மாற்கு 1:14-15). அவருடைய பல உவமைகள் சொல்லப்பட்ட ராஜ்யத்தின் தன்மையை விளக்குவதற்காக கூறப்பட்டன (மாற்கு 4:30).

சுவாரஸ்யமாக, உவமைகளை பயன்படுத்துவதற்கு இயேசு தாமே கூறிய காரணம் உண்மையிலேயே வியக்கத்தக்கது: அவர்கள் புரிந்துகொள்ளவுமாட்டார்கள், திருந்தவுமாட்டார்கள், மன்னிக்கபடவுமாட்டார்கள்! (மாற்கு 4:12).

இது ஒன்றும் புதிதல்ல. பிரசங்கிக்கும்படி கட்டளைப் பெற்ற போது, தேவன் ஏசாயாவிடம் சொன்னார்: "நீங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும் இருங்கள் [...] இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளினால் கேளாமலும், தங்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலுமிருக்க…" (ஏசா. 6:9-10).

தேவனுடைய வார்த்தையின் மேல் பசியுள்ளவர்கள் சத்தியத்தை கேட்டு மகிழ்ச்சியடைவார்கள். ஆனால் கேட்க விரும்பாதவர்கள், இந்த சத்தியத்தை எவ்வளவு எளிமையாக அவர்கள் முன் வைத்தாலும், புரிந்துகொள்ள மறுப்பார்கள், மனம் மாறவும் மறுப்பார்கள், இரட்சிப்படையவும் மறுப்பார்கள்.




விதைக்கிறவனுடைய
உவமை

# விதைக்கிறவன் விதைக்க புறப்பட்டான்...

“அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குப் போதித்தார்; போதிக்கிறபொழுது அவர்களுக்குச் சொன்னது:கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்.” (மாற்கு 4:2-3)

- சில நாட்களில், விதை மரிக்கிறது (மாற்கு 4:4)

- ஒரு சில வாரங்களில், விதை மரிக்கிறது (மாற்கு 4:5-6)






வழிகளில் விழுந்த விதை

பாறைகளில் விழுந்த விதை

நல்ல நிலத்தில் விழுந்த விதை

முட்களில் விழுந்த விதை





- பருவத்தின் முடிவில், விதை கனியை தருகிறது (மாற்கு 4:8)

- ஒரு சில மாதங்களில், விதை மரிக்கிறது (மாற்கு 4:7)

விதைப்பவரும் விதையும் மாறுவதில்லை. என்றாலும், நான்கு நிலப்பரப்புகளில் ஒவ்வொன்றிற்கும் முடிவு முற்றிலும் வேறுபடுகிறது. இது அனைத்தும் விதை பெறும் முறையைப் பொறுத்தது.

# உவமையின் விளக்கம்

## "விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்." (மாற்கு 4:14)

**விதை தேவனுடைய வார்த்தை, அதை பிரசங்கிக்கிற யாவரும் விதைப்பவர் ஆவார்.**

- இவர்களுக்கு விருப்பமில்லை, சாத்தான் அவைகளை எடுத்துப்போடுகிறான் (மாற்கு 4:15)

- இவர்கள் வார்த்தையை ஏற்றுக்கொள்கிறார்கள், ஆனால் சோதனைகளை அவர்களால் தாங்கமுடிவதில்லை (மாற்கு 4:16-17)





வழிகளில் விழுந்த விதை

பாறைகளில் விழுந்த விதை

நல்ல நிலத்தில் விழுந்த விதை

முட்களில் விழுந்த விதை






- இவர்கள் சோதனைகளை தாங்கி கொள்கிறார்கள், ஆனால் அதில் தங்கி விடுகிறதில்லை. இவர்கள் கனி கொடுக்கிறார்கள் (மாற்கு 4:20)

- இவர்கள் வார்த்தையை ஏற்றுக்கொள்கிறார்கள், ஆனால் வசதியாக இருக்க விரும்புகிறார்கள் (மாற்கு 4:18-19)

**எந்தவிதமான நிலம் நான்? கனி கொடுப்பதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?**

# மற்ற உவமைகள்





# விளக்கு மற்றும் அளவீடு

"பின்னும் அவர் அவர்களை நோக்கி: விளக்கைத் தண்டின்மேல் வைக்கிறதற்கேயன்றி, மரக்காலின் கீழாகிலும், கட்டிலின் கீழாகிலும், வைக்கிறதற்குக் கொண்டுவருவார்களா? (மாற்கு 4:21)

உரையாடலை கற்பனை செய்து பாருங்கள்: "நீ கொண்டு வந்தாயா...?" "இல்லை!"; "நீ இதை கீழே வைத்தாயா...?" "ஆம்!"

தன்னுடைய பார்வையாளர்களின் கவனத்தை எவ்வாறு ஈர்ப்பது என்பது இயேசுவுக்கு தெரியும். இப்போது அவர்கள் ஆவிக்குரிய பாடத்தை பெற தயாராகிவிட்டனர்.



சிறிது சிறிதாக, நற்செய்தியின் சத்தியத்தை அனைவரும் அறியும் வகையில் இயேசு அதை வெளிப்படுத்தினார் (மாற்கு 4:22).

அந்த இரவில், அவர்கள் இல்லத்தில் விளக்கேற்றும் போது, "கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால்" (மாற்கு 4:23) சந்தேகமேயில்லாமல் பாடத்தை நினைவுகூர்ந்திருப்பார்கள்.

"பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள். எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்; கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்." (மாற்கு 4:24).

பட்டணத்தின் தெருக்களில், வாங்குபவர் விரும்பும் பொருளின் அளவை கணக்கிடவும், வணிகர்கள் தங்கள் தயாரிப்புகளை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விற்பதற்கும் நிலையான அளவீடுகளை பயன்படுத்தினர்.






விற்பவர் நல்லவராக இருந்தால், அவர் தனது வாடிக்கையாளரை திருப்பதிபடுத்தும் வகையில் இன்னும் கொஞ்சம் தயாரிப்புகளை சேர்ப்பார். யாராவது சத்தியத்திற்க்கு செவிகொடுத்தால், அவர்கள் இன்னும் அதிகமாக பெறுவார்கள். நீங்கள் சத்தியத்தை நிராகரித்தால், உங்களில் இருக்கும் சத்தியத்தையும் நீங்கள் இழந்துபோவீர்கள் (மாற்கு 4:25).

# வளர்ச்சி மற்றும் கடுகு விதை

"பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து;" (மாற்கு 4:26)

தானிய வளர்ச்சியின் சுழற்சியை இயேசு நினைவுகூறுகிறார் (மாற்கு 4:28):

1. புல்
2. கதிர்கிளை
3. தானியம்



மனிதனையல்ல, முழுக்க தேவனை சார்ந்திருக்கக்கூடிய சுழற்சி முறை (மாற்கு 4:27).

விசுவாசிகளின் நல்ல நிலம் என்னும் இருதயத்தில் விதைக்கப்பட்ட நற்செய்தி விதை இதுவாகும். இயேசு வரும்வரை பரிசுத்த ஆவியின் கிரியையால் நாம் மேலும் மேலும் சத்தியத்தில் வளர்கிறோம்... (மாற்கு 4:29; மத். 13:39).



"அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அது பூமியில் விதைக்கப்படும்போது பூமியிலுள்ள சகல விதைகளிலும் சிறியதாயிருக்கிறது;" (மாற்கு 4:31)

பரலோக இராஜ்யம் ஒரு சிறிய கடுகுவிதைக்கு ஒப்பிடப்படுகிறது (மாற்கு 4:30-31).



விதைத்து 50 நாட்களுக்கு விறு கடுகு 30-40 செமீ உயரத்திற்கு வளர்கிறது, மற்றும் ஏற்கனவே அறுவடை செய்யக்கூடிய பழங்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது, அது 7 மீட்ட உயரம் வளரக்கூடியது (23 அடி.).

சிறியது, அதுவே அதன் ஆரம்பம் : 120 "எழுத்தறிவற்ற" மக்கள் எருசலேமின் ஒரு அறையிலே தங்களை ஒளித்துக்கொண்டார்கள்.

ஆனால் அவர்களது விரிவாக்கம் உலகம் முழுவதும் சென்றடைந்தது, அதிக எண்ணிக்கையிலான விசுவாசிகளை கொண்ட மதமாக மாறியது.